TFM

10 - ஆம் வகுப்பு

காலம் : 1.30 மணி

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2024

## சமூக அறிவியல்

மதிப்பெண்கள் : 50

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 1 = 7

கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?

அ) ஆகாயப் போர் முறை ஆ) பதுங்குக் குழிப்போர் முறை

இ) நீர்மூழ்கி கப்பல் முறை ஈ) கடற்படைப் போர் முறை.

2. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?

அ) கவாசாகி. ஆ) டோக்கியோ இ) ஹிரோசிமா ஈ) நாகசாகி.

3. பாக் நீர் சந்தி மற்றும் மன்னார் வளைகுடா – ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது .

அ) கோவா ஆ) இலங்கை இ) மேற்கு வங்காளம் ஈ) மாலத்தீவு.

4. ஒரே அளவு மழை பெறும் இடங்களை இணைக்கும் கோடு .......... ஆகும்.

அ) சம மழை கோடுகள் ஆ) சம அழுத்தக் கோடுகள்

இ) சம வெப்பக் கோடுகள் ஈ) அட்சக் கோடுகள்.

5. இந்தியாவில் தங்க இழை பயிர் என அழைக்கப்படுவது............. .

அ) பருத்தி ஆ) கோதுமை இ) புகையிலை ஈ) சணல்

6. நடுவண் அரசின் அரசியல் அமைப்பு தலைவர் ..................ஆவர்.

அ) தலைமை நீதிபதி ஆ) பிரதம அமைச்சர்

இ) அமைச்சரவைக் குழு ஈ) குடியரசுத் தலைவர்.

7. காட் (GATT) – இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்.

அ) டோக்கியோ ஆ) உருகுவே இ) டார்குவே ஈ) ஜெனீவா

II. எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளிக்கவும் 6 x 2 = 12

8. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.

9. "டாலர் ஏகாதிபத்தியம்" தெளிவுபட விளக்குக.

10. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி கூறுக.
12. "வெப்பக்குறைவு" விகிதம் என்றால் என்ன?
13. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?
14. நடுவண் அரசின் அமைச்சர்கள் தர நிலைகளின்படி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்?
15. தனி நபர் வருமானம் என்றால் என்ன?
16. உலகமயமாக்கள் என்றால் என்ன?

III. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி : 4 x 5 = 20

17. முதல் உலகப்போருக்கான காரணங்களை விவரி.
18. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
19. இமயமலை இல்லை என்றால், இந்திய புவியல் அமைப்பின் முக்கியத்துவம் குறித்து நீவிர் அறிவது யாது?
20. அ). வானிலை மற்றும் காலநிலையை வேறுபடுத்துக.
ஆ) மழைநீர் சேமிப்பு அவசியம் – காரணம் கூறு.
21. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக?
22. நாட்டு வருமானத்தைக் கணக்கிடுவதற்கு தொடர்புடைய கருத்துக்கள் எவை?

IV. இரு வினாவிற்கும் விடையளி: 2x3=6

23. 1900 முதல் 1930 வரையிலான ஆண்டுக்கு உட்பட்ட முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் மூன்றினை காலக்கோட்டில் அமைத்திடுக?
24. உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.
1. பசிபிக் பெருங்கடல் 2. இத்தாலி 3. துருக்கி.
25. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களைக் குறிக்கவும்?
1. அதிக மழை பெறும் பகுதி. 2. மலபார் கடற்கரை. 3. வண்டல் மண்.
4. நர்மதை ஆறு. 5. தார் பாலை வனம்.
5 x 1 = 5



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com